**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.366/2024 நாள்- 05.08.2026

வா.சா.3.

இந்திய சாட்சியச் சட்டம் 1872 பிரிவு 44 ன் படி ஆணையிட்டு பிரமாணம் உறுதி செய்யப்பட்டு சாட்சியின் முதல் விசாரணை வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்-பாண்டி | தந்தையின் பெயர்- |
| விலாசம்- | தாலுகா- |
| வயது- | தொழில் |

**முதல் விசாரணை**

நான் இராஜபாளையம் நகராட்சியில் வருவாய் ஆய்வாளராக வேலை பார்த்து வருகிறேன். இராஜபாளையம் நகராட்சி சர்வே வார்டு F, பிளாக் எண்.8, கதவு எண்.37, ஊரணிபட்டி தெரு, வரிவிதிப்பு எண்.23323 சோலைமலை நாடார் என்பவர் பெயரில் 2002-2003 ம் ஆண்டில் சொத்துவரி கேட்பு பதிவேட்டில் இருந்தது. தற்போது சோ. அழகப்பன் பெயரில் பொ.மா.ம.எண்.93/2019 /2005 தேதி 12.01.2006 என்று பதிவாகியுள்ளது. அதற்கான **பதிவேட்டு நகல் தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ.3-** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது வரை சோ. அழகப்பன் பெயரில் வரிவிதிப்பு எண் 23323 என்பது கணினி பதிவேட்டில் புதிய வரிவிதிப்பு எண்.127/015/901117 என்று விதிக்கப்பட்டு வருகிறது.

**குறுக்கு விசாரணை** **பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.